

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (27.11.2025) தலைமைச் செயலகத்தில், வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போது நிலவிவரும் வானிலை நிலவரம் குறித்தும், பேரிடர் மேலாண்மைக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள சிறப்பு முன்னெடுப்புகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (27.11.2025) தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் சந்தித்து, பாரத சாரணர் மற்றும் வழிகாட்டிகள் அமைப்பின் சார்பில் சாரணர் / வழிகாட்டி இயக்கத்திற்கு மிகச் சிறந்த சேவையை ஆற்றியதை அங்கீகரித்து (In recognition of most exceptional service to the scout / guide movement) வழங்கப்பட்ட "SILVER ELEPHANT AWARD விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

### இந்துசமய அறநிலையத் துறை சார்பில் ரூ.6.77 கோடியில் 20 முடிவுற்றப் பணிகள் திறப்பு!

# ரூ.79.94 கோடி செலவில் 25 புதிய திட்டப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, நவ.28–**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.11.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 79 கோடியே 94 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 18 திருக்கோயில்களில் 24 புதிய திட்டப் பணிகள் மற்றும் ஒரு கல்லூரி உள்விளையாட்டு அரங்கம் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டி, 6 கோடியே 77 இலட்சம் ரூபாய் செலவில் 5 திருக்கோயில்களில் 4 முடிவுற்ற திருப்பணிகள், கல்லூரி ஆய்வகம், செயல் அலுவலர் குடியிருப்புகள் மற்றும் 13 ஆய்வாளர் அலுவலகங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.**

இந்து சமய அறநிலையத்துறையானது தனது கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு, குடமுழுக்குகள் நடத்துதல், பழமையான திருக்கோயில்களை அதன் தொன்மை மாறாமல் புனரமைத்து பாதுகாத்தல், திருத்தேர் மற்றும் திருக்குளங்களை சீரமைத்தல், பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயிலுக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல் போன்ற பல்வேறு பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது. மேலும், சட்டமன்ற மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்புகளையும் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

**18 திருக்கோயில்களில் 24 புதிய திட்டப் பணிகள் மற்றும் கல்லூரி உள்விளையாட்டு அரங்கத்திற்கு அடிக்கல் நாட்டி, கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்தல் :**

திருவண்ணாமலை, அருணாசலேசுவரர் திருக்கோயிலில் 22.11கோடி ரூபாய் மதிப்பீட்டில் கிரிவலப்பாதையில் பக்தர்கள் அடிப்படை வசதிகள் மற்றும் சுகாதார வளாகம், பக்தர்கள் இளைப்பாறுதல் மண்டபம் கட்டும் பணிகள்; திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம், அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் 8.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருமலை திருப்பதியில் அமைந்துள்ள இராமானுஜ ஜீயர் மடத்தின் அறைகளை சீரமைத்தல்; திருநெல்வேலி மாவட்டம், பாபநாசம், பாபநாசசுவாமி திருக்கோயிலில் 6.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பரிகார மண்டபம், பாபநாச தீர்த்தம் மற்றும் துணிகள் சேகரிக்கும் மையம், பொருட்கள் வைப்பறை கட்டுதல் மற்றும் நந்தவனம் அமைத்தல்;

இராணிப்பேட்டை மாவட்டம், குமரகிரி, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 5.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 114 அடி உயரம் கொண்ட முருகர் சிலை அமைக்கும் பணி; ஈரோடு மாவட்டம், பண்ணாரி, பண்ணாரி மாரியம்மன் திருக்கோயிலில் 5.08 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்கோயிலின் கிழக்குப் பக்கம் புதிய தார் சாலை அமைத்தல், மடப்பள்ளி மற்றும் பிரசாத தயாரிப்பு கூடம் கட்டும் பணிகள்; இராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர், லட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயிலில் 3.77 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நரசிம்ம தீர்த்த குளத்தை சீரமைக்கும் பணி;

மயிலாடுதுறை மாவட்டம், மேலையூர், பூம்புகார் கல்லூரியில் 2.88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உள்விளையாட்டு அரங்கம் கட்டும் பணி; விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம், ஆஞ்சநேயசுவாமி திருக்கோயிலில் 2.82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்குளத்தை சீரமைத்தல்; தென்காசி மாவட்டம், கடையம் பெரும்பத்து, தோரணமலை முருகன் திருக்கோயிலில் 1.88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கிரிவலப்பாதை அமைக்கும் பணி; கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர், பட்டீசுவரசுவாமி திருக்கோயிலில் 1.41 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக சுவாமி மரத்தேர் செய்யும் பணி; கிருஷ்ணகிரி மாவட்டம், காட்டிநாயனப்பள்ளி, திம்மராயசுவாமி திருக்கோயிலில் 1.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்பு கட்டும் பணி; திருவள்ளூர் மாவட்டம், திருவேற்காடு, தேவி கருமாரியம்மன் திருக்கோயிலின் உபகோயிலான ஊன்றீஸ்வரர் திருக்கோயிலில் 1.16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நுழைவாயிலுடன் கூடிய மதில் சுவர் அமைக்கும் பணி;

**ஆயிரம் ஆண்டுகள் பழமையான திருக்கோயில்களை புனரமைக்கும் திட்டத்தின்கீழ்,** 2.96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாவட்டம், செரப்பணஞ்சேரி, வீமீஸ்வரர் திருக்கோயில், 2.95 கோடி மதிப்பீட்டில் கரூர் மாவட்டம், சோமூர், சோமேஸ்வர சுவாமி திருக்கோயில், 1.84 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேட்டுமருதூர், ஆராவமிதீஸ்வரர் திருக்கோயில், 2.78 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தஞ்சாவூர் மாவட்டம், பின்னவாசல் அகஸ்தீஸ்வரர் திருக்கோயிலில்,2.68 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பழைய ஆற்காடு, அனந்தீஸ்வரர் சுவாமி திருக்கோயில், 2.63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வேப்பத்தூர், வீற்றிருந்த பெருமாள் திருக்கோயில், 1.24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுக்கோட்டை மாவட்டம், வெள்ளாஞ்சார், தாணுமாலீஸ்வரர் திருக்கோயில் ஆகிய 7 திருக்கோயில்களை புனரமைக்கும் திருப்பணிகள்; என மொத்தம் 79.94 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 25 புதிய திட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார்.

**5 திருக்கோயில்களில் 4 முடிவுற்ற திருப்பணிகள், கல்லூரி ஆய்வகம், செயல் அலுவலர் குடியிருப்புகள் மற்றும் 13 ஆய்வாளர் அலுவலகங்களை திறந்து வைத்தல்**

திண்டுக்கல் மாவட்டம், பழனி, பழனியாண்டவர் பாலிடெக்னிக் கல்லூரியில் 2.46 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட இயந்திரவியல் துறை ஆய்வகம்; 1.99 கோடி ரூபாய் செலவில் மயிலாடுதுறை மாவட்டம், ஒழுகைமங்கலம், மாரியம்மன் திருக்கோயில், மூவலூர், மார்க்கசகாயேஸ்வரர் திருக்கோயில், திருசக்திமுற்றம், சக்திவனேஸ்வரர் திருக்கோயில் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம், வடக்கனந்தல், உமாமகேஸ்வரர் திருக்கோயில் ஆகிய 4 திருக்கோயில்களில் கட்டப்பட்டுள்ள அன்னதானக் கூடங்கள்;

2.32 கோடி ரூபாய் செலவில் தஞ்சாவூர் மாவட்டம், ஒப்பிலியப்பன்கோவில், வேங்கடாஜலபதி சுவாமி திருக்கோயில் உதவி ஆணையர் குடியிருப்பு, செயல் அலுவலர் குடியிருப்பு, மயிலாடுதுறை மாவட்டம், மூவலூர், மார்க்கசகாயேஸ்வரர் திருக்கோயில் செயல் அலுவலர் குடியிருப்பு, பொறையார், செம்பனார்கோயில், மணல்மேடு, தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம், ஒட்டப்பிடாரம், விழுப்புரம் மாவட்டம், எறையூர், செஞ்சி, திருக்கோவிலூர், மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், கள்ளிக்குடி, திருப்பரங்குன்றம், மதுரை வடக்கு மற்றும் சோழவந்தான் ஆகிய 13 இடங்களில் கட்டப்பட்டுள்ள ஆய்வாளர் அலுவலகங்கள்;

என மொத்தம் 6.77 கோடி ரூபாய் செலவிலான 20 முடிவுற்ற பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் முனைவர் துரை. இரவிச்சந்திரன், கூடுதல்ஆணையர் (திருப்பணி) பொ.ஜெயராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக திருவண்ணாமலை மாவட்டத்திலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் க. தர்ப்பகராஜ், அருணாசலேசுவரர் திருக்கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலர் ஜெ. பரணிதரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




## தி.மு.க. இளைஞர் அணி

### இடங்கணசாலை நகரத்துக்கு உட்பட்ட பாக அமைப்பாளர்கள் நியமனம்

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

**கழகத் தலைவர் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், தலைமைக் கழக ஒப்புதலுடன், ஒன்றியத்துக்கு உட்பட்ட கிளைகள், நகர-பகுதி-பேரூர் வட்டங்கள் மற்றும் அனைத்து பாகங்களிலும் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். அந்த வகையில், சேலம் மேற்கு மாவட்டம், சங்ககிரி சட்டமன்றத் தொகுதிக்கான நிர்வாகிகளின் அறிவிப்பு ஏற்கனவே வெளியான நிலையில், இடங்கணசாலை நகரத்தில் விடுபட்ட பாக அமைப்பாளர்கள் கீழ்க்கண்டவாறு நியமிக்கப்படுகின்றனர். ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

**சேலம் மேற்கு மாவட்டம் - சங்ககிரி சட்டமன்றத் தொகுதி**

**இடங்கணசாலை நகரம்**

**பாக அமைப்பாளர்கள் :**

பாகம் – 244 : ஆ.வெங்கடேஷ், 9/2/1, மாட்டையாம்பட்டி, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 245 : ர.மோகன்குமார், 1/293, மாட்டையாம்பட்டி, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 246 : வ.ஜெகநாதன், 2–182, தூதனூர், இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 247 : ம.சிவகுமார், 6/76, மேட்டுக்காடு, கொசவப்பட்டி, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 248 : மு.கோபால், 54, சிட்டனூர், இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 249 : வ.மதியழகன், 3–109, பிள்ளையார் கோயில் அருகில், இ.காட்டூர், இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 250 : கா.விஷ்ணு, 3–337, மட்டக்காரன் வீதி, கே.கே. நகர், இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 251 : வி.வெங்கடேசன், 130/125, கே.கே. நகர், இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 252 : மா.எழிலரசன், 256–ஏ, கே.கே. நகர், இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 253 : சு.தியாகராஜன், 6/389–ஏ, கே.கே. நகர், இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 254 : த.பவித்ரன், 6–140, பரமகவுண்டனூர், இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 255 : ப.மணிதேவன், 215, கொசவப்பட்டி, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 256 : மு.தினேஷ்குமார், 9/381, ஏழுமாத்தனூர், இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 257 : மோ.தனுஷ், 10–9–கே, கிழக்கு புளியம்பட்டி, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 258 : கி.அகிலன், 9/124, நல்லணம்பட்டி, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 259 : கா.சின்னத்தம்பி, 18/19, சித்தர் கோயில், இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 260 : செ.பிரகாஷ், 18/69, நல்லணம்பட்டி காட்டுவளவு, அப்பாச்சிவளவு, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 261 : கு.சிவபிரகாஷ், 10/51, கிழக்கு புளியம்பட்டி, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 262 : ச.ஹரிபிரகாஷ், 17/75, செட்டியார் தெரு, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 263 : கு.விஜய், 11/72–49, வடக்குத் தெரு, காடையாம்பட்டி, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 264 : ப.சுசிந்திரன், 13/508–ஏ, பாப்பாபட்டி, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 265 : சி.ராஜசேகர், 14/232/என்.ஏ, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 266 : ம.செல்வராஜ், பாப்பாபட்டி காட்டுவளவு, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 267 : தி.சூர்யா, 13/285, பழக்காரத் தோட்டம், மோட்டூர், இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 268 : ர.மெய்யழகன், 27/15, ராசிகவுண்டனூர், இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 269 : ச.பிரகாஷ், 16/13/129, மெய்யனூர் காட்டுவளவு, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 270 : க.ராமலிங்கம், 437/13, சக்தி மாரியம்மன் கோயில் தெரு, கிழக்கு கோனேரிப்பட்டி, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 271 : சி.கோகுல்ராஜ், 12, பி.கே.எஸ். நகர், கோனேரிப்பட்டி, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 272 : கு.மணிகண்டன், 286, கொத்தனாங்காடு, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 273 : ம.கணபதி, 347, ஆசாரிப் பட்டறை, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 274 : கோ.கோகுல், 124/62, வடக்குத் தெரு, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.

அன்பகம்
சென்னை – 18
நாள் : 26–11–2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி